**43. அம்பரீடன் கதை**



அம்பரீடன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றிய ஓர் அரசன். இவன் நெடுநாள் நெடுமாலை நோக்கித் தவம் புரிந்து சிறந்த மேன்மைகளைப் பெற்றிருந்தான். சிறந்த ஈகையுடையவன். யார் வந்து எதனைக் கேட்டாலும் இல்லையென்னாமல் வழங்குவான். இவனுடைய கொடைத்திறத்தைக் கண்டு வறியவரனைவரும் இவனைத் தம்முடைய உயிரைப் போல் மதித்திருந்தார்கள். தான்உண்ணுகின்றது போன்ற உணவையே எல் லோருக்கும் இடுவான். ஏகாதசிதோறும் விரதம் இருப்பான் : விரதத்தின் முடிவில் அறுபது கோதானஞ் செய்வான். துவாதசியன்று பலரோடு சாப்பிடுவான். ஒரு முறைதுருவாசர் வந்தார். அவரையும் தன்னோடு வைத் துக்கொண்டு உணவு கொள்ள எண்ணினான். அவர்காளிந்தியாற்றில் நீராடி வருவதாகச் சென்றார். அவருடைய வரவை இவன்  எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். முனிவர் குறித்த காலத்தில் வரவில்லை. நோன்பு முறையைத் தவற விட்டுவிடக் கூடாது என்று எண்ணிச் சிறிதுநீர் அருந்தினான். பிறகு துருவாசர் வந்தார். அரசன் நீர் அருந்தியதை அறிந்தார். நான் வருவதற்கு முன் எச்சில்செய்து விட் டாய் என்று சினங்கொண்டார். தம்முடைய தவப் பெருமையால் பூதம் ஒன்றை உண்டாக்கி அரசன்மீது ஏவினார். அப்பூதம் அரசனைக் கொல்லுவதற்கு வந்தது. அப்பொழுது அரசனுடைய தானப் பெருமையால்மாலின் ஆழிப்படை மன்னன் கைக்கு வந்தது. அப்படையால் அரசன் அப்பூதத்தைக் கொன்றான். பிறகு அப்படை முனிவரையுங் கொல்ல எண்ணித் துரத்தியது. முனிவர் அஞ்சியோடினார். அதுவுந் தொடர்ந்தது. முனிவர் திருமாலிடம் ஓடித் தம்மைக் காப்பாற்றவேண்டும் என்றார். திருமால் "உன்னைக் காப்பாற்ற நம்மால்முடியாது. அம்பரீடனிடமே ஓடிப்போய் அடைக்கலம்புகு ; இன்றேல் அழிந்தொழிவாய்" என்றார். துருவாசர் அம்பரீடனை அடைந்து அடைக்கலம் புகுந்தார். தம்மைக் காப்பாற்றவேண்டும் என்றார். உருளைப்படையும் அகன்று சென்றது. கொடைப் பெருமையால் அம்பரீடன் அடைந்துள்ளசிறப்பை பெண்ணித் துருவாசர் வியந்தார். தவஞ் செய்பவர்களுடைய தவச் சிறப்பும் பசியுடைய யார்களது பசியைப் போக்கும் சிறப்புக்குப் பிறகுதான் என்பது அம்பரீடனிடத்தில் அன்று நன்கு விளங்கியது.

[தானப்பெருமை]

(பாகவதம்)